# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை - 2020

## தரம் - 11 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

பெயர் / சுட்டெண் : ......................

திரு.ச.சரவணபவன் BBA, PGDE, M.Ed (Hons)

**வழங்கப்பட்ட வினாக்களுக்கான சரியான விடைகளைத் தருக**

1. "பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்தல் வியாபாரம் எனப்படும்" வியாபாரத்தினது வகைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விவரிப்பதுடன் ஒவ்வொரு வியாபார வகைகளினதும் செயற்பாட்டினை வெளிப்படுத்தும் வகையிலான உதாரணமும் தருக.

2. வணிக வங்கிகளினால் பேணப்படும் கீழ்வரும் கணக்குகள் ஒவ்வொன்றினையும் சுருக்கமாக விபரிப்பதுடன் அக் கணக்குகள் ஒவ்வொன்றினையும் ஆரம்பிப்பது தொடர்பில் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக
   i. சேமிப்புக் கணக்கு
   ii. நிலையான வைப்புக் கணக்கு
   iii. நடைமுறைக்கணக்கு

3. காசோலை ஒன்றுடன் தொடர்பான தகவல் கீழே தரப்பட்டுள்ளன. இத்தரவுகளைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக

   வரைபவர் - த.வசந்தன்

   பணம் பெறுபவர் - சி.குகன்

   பணம் வழங்குபவர்: இலங்கை வங்கி நெல்லியடி

   பெறுமதி - ரூ 100000

   வரையப்பட்ட திகதி- 10.04.2020

   i. இத்தரவுகளுக்கமைய மாதிரி காசோலையொன்றை வரைக
   ii. இக்காசோலைக்கு உச்சப்பாதுகாப்பினை பெற்றுக் கொடுக்கக் கூடியவாறு குறுக்குக் கோடொன்றை இடுக
   iii. இக்காசோலையில் புறக்குறிப்பிடுதல் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதனை வரைந்து காட்டுக

4.
   i. இலத்திரனியல் பணம் என்பதினால் விளங்கிக் கொள்வது யாது?
   ii. இலத்திரனியல் பணம் தொடர்பான சேவைகளின்போது பயன்படுத்தப்படுகின்ற அட்டைகள்பின்வருவனவாகும். அவை ஒவ்வொன்றினதும் செயற்படுத்தும் முறையினை விபரிக்குக

   அ) கடன் அட்டைகள் (Credit cards)

   ஆ) வரவு அட்டைகள் (Debit cards)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

இ) தன்னியக்க ரெலர் இயந்திர அட்டைகள் (ATM Cards)

5.
 i. காப்புறுதி என்பதினால் விளங்கிக் கொள்வது யாது? காப்புறுதியுடன் தொடர்புபடும் பிரிவினரைக் குறிப்பிட்டு சுருக்கமாக விவரிக்குக
 ii. காப்புறுதித் தத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினதும் அடிப்படைக் கருத்தினை எடுத்துக் கூறுக
 iii. ஆதனக் காப்புறுதியினை விட ஆயுள் காப்புறுதியில் காணப்படும் சிறப்பம்சங்களை குறிப்பிடுக

6.
 i. வணிக நடவடிக்கைகளில் தொடர்பாடலின் முக்கியத்துவம் யாது?
 ii. தொடர்பாடலில் பயன்படுத்தப்படும் வேறுபட்ட தன்மைகளை குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான உதாரணங்களைத் தருக
 iii. தொடர்பாடல் சேவை செயன்முறையானது எவ்வாறு இடம்பெறுகிறது?

7.
 i. போக்குவரத்தின் அடிப்படை மூலகங்கள் யாவை? அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கள் தருக
 ii. பொருத்தமான போக்குவரத்து முறையை தெரிவு செய்யும்போது கருத்தில் கொள்ளப்படவேண்டிய காரணிகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கள் தருக
 iii. போக்குவரத்து முறைகளைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றினதும் சிறப்பு அம்சங்களைக் குறிப்பிடுக

8.
 i. முகாமைத்துவ கருமங்களைக் குறிப்பிடுக
 ii. முகாமைத்துவ கருமங்கள் ஒவ்வொன்றினதும் செயன்முறையில் கவனம் செலுத்த வேண்டியவை எவை?

9.
 i. சந்தைப்படுத்தல் என்றால் என்ன? அதில் உள்ளடக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை?
 ii. இலக்குச் சந்தை என்பதினால் நீர் விளங்கிக் கொள்வது என்ன? உதாரணம் தருக
 iii. சந்தைப்படுத்தல் கலவையின் வகைகளைக் குறிப்பிட்டு அவை எவ்வகையில் சந்தைப்படுத்தலில் முக்கியத்துவம் பெறுகிறது என விவரிக்குக

10. தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக எமது பிரதேசத்தில் வணிகச் செயற்பாடுகள் எத்தகைய பாதிப்புக்கு உட்பட்டுள்ளது என்பதினை கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் குறிப்பிடுக
 i. உற்பத்தி
 ii. வியாபாரம்
 iii. துணைச் சேவைகள்

agaram.lk